களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக் கூடிய திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்கு மேல் வேலை கொடுக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்படுகிறதே, அந்த நிபந்தனையைத் தளர்த்தி வேலை வாய்ப்பை அதிகமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாசில்தார்கள் மூலமாக அவற்றைப் பரிசீலனை செய்து கடன் கொடுக்கிறார்கள் கடன் வேண்டுவோர்கள் சான்றிதழ்கள் தயாரித்துக் கொடுப்பதிலே தகராறுகள் ஏற்படுகின்றன. இலங்கையிலிருந்தோ அல்லது பர்மாவிலிருந்தோ வரக்கூடிவர்கள் சான்றிதழ்களைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதனால் காலதாமதம் ஏற்படலாம். மேலும் சிலர் தாங்கள் வந்தபிறகு ஒரு நிதியுதவியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இரண்டாவது நிதியுதவியைப் பெறுவதற்கு விண்ணப்பித்தாலும் முன்னாலேயே தாங்கள் பெற்ற நிதியுதவிக்கான சான்றிதழ்களைத் தராமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையினால்தான் தாமதம் ஏற்படலாமே தவிர அலுவலகங்களிலே எந்தவிதமான தாமதமும் இல்லை. தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்புபற்றி, அடுத்த கேள்விக்கு நான் விரிவாகப் பதில் சொல்ல இருக்கிறேன். குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்குத் தான் வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலேதான் மத்திய அரசு கொடுத்த அந்த திட்டத்தின் அடிப்படையிலேதான் செய்து வருகிறோம். எனவே அதிலே நாம் எந்தவிதமான மாறுதலையும் செய்யமுடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்கிறபோது புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். சிலோனிலிருந்து அல்ல இந்தியாவிலும் வந்து குடியமர்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் என்று மத்திய அரசாங்கம் ஏதாவது புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறதா ? அவர்களைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் நம்முடைய அரசாங்கமே ஏற்றுக்கொணடு, அவர்களைப் பல்வேறு மாநிலங்களிலே குடியமர்த்தி புனர்வாழ்வு கொடுத்தாலும், நம்முடைய மாநிலமே அவர்களைப் பொறுப்பாகக் கவனிக்க தயாராக இருக்கிறதா ? என் என்றால் புகார்கள் வந்திருக்கின்றன. சில மாநிலங்களில் சரியாக அவர்களையெல்லாம் கவனிக்கவில்லையென்று நான் ஏற்கனவே கூட சொன்னேன். எனவே நம்முடைய இந்த அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வருகிறவர்களை எப்படி எப்படிக் கவனிக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் திட்டம் கொடுத்திருக்கின்றதோ அந்த அடிப்படையிலேதான் கவனித்து வருகிறோம். அந்த வகையிலேதான் அவர்களைக் குடியமர்த்துகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக ஆகும் செலவுகளை எல்லாம் மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும் வழங்குகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஆயிரக் கணக்கிலே இலங்கையிலேயிருந்து வருகிற அகதிகளை அந்தமான் தீவிலே குடியேற்றவேண்டும் என்று ஒரு நோக்கம் இருந்ததே. இப்பொழுது